நாள் -15.04.2025

**ST.C. No**.586/2023

ம.சா.1.ஈஸ்வரி, க/பெ.ரமேஷ்கண்ணன்.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 15th **day of April** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வங்கியில் லோன் பெற்றுத்தரும் முகவராக பணியாற்றுகிறேன். அவ்வாறு முகவராக பணியாற்றிதற்கான அடையாள அட்டை உள்ளதா என்றால் அடையாள அட்டை கிடையாது. எண் மட்டும் கொடுப்பார்கள். தேவைப்பட்டால் அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னுடைய கணவர் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளார்.

2. எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளார்கள். ஒரு மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. 2வது மகள் சட்டம் பயின்று வந்தார் என்றால் சரிதான். தற்பொழுது படிக்க வைக்க முடியாததால் பாதியிலேயே படிப்பை நிறுத்தி விட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியை 5 வருடங்களாக தெதரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னபப்படித்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. எதிரிக்கு ஆல்வின் மற்றும் மெல்வின் என் இரண்டு மகன்கள் மற்றும் 1 மகள் உள்ளார்கள்.

3. புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரி அடிக்கடி அவசர தேவைக்காகவும், குடும்ப தேவைக்காகவும் அடிக்கடி சிறுசிறு தொகையாக கடன் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை பெற்றார் என்று புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளான என்றால் குறிப்பிட்டுள்ளேன். ஜனவரியில் இருந்து ஏப்ரல் மாதம் வரை குறிப்பிட்டுள்ளேன் அவ்வாறு புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில்

குறிப்பிடவில்லை. என்றால் சரிதான்.

4. எதிரி பணம் பெற்றபோது யார் யார் இருந்தார்கள் என்று புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டவில்லை என்றால் சரிதான். என்னுடைய குடும்பத்தினர் இருந்தார்கள். எங்கு வைத்து கொடுத்தேன் என்று குறிப்பிட்டவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய அறிவிப்பில் என்னுடைய குடும்பத்தார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி வாடகை வீட்டில் வசித்து வருகிறார். சொந்த வீடு ஊரில் இருப்பதாக கூறியிருந்தார். அவருடைய அம்மா வீடு அதை நான் பார்த்துள்ளேன். எதிரியினுடைய பெற்றோருக்கு உடல் நிலை சரியில்லததால் மருத்துவ செலவிற்காக அவசரமாக தேவைப்படுவதாகவும், என்று குறிப்பிட்டார். மேற்படி விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

5. எதிரி மே மாதம் முதல் வாரத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதாக எந்த தேதியில் எங்கு வைத்து கூறினார் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன். பணம் வாங்கும் போதே மே மாதத்தில் திருப்பி கொடுப்பதாக கூறினார். வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனுவில் என்னுடைய வங்கி கணக்கு, மற்றும் மகள் வங்கி கணக்கிலிருந்து எதிரியினுடைய மகன்களின் வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பியதாக குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். கையிலும் பணம் பெற்றுள்ளார். எந்தெந்த தேதியில் எவ்வளவு பணத்தை அனுப்பினேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

6. வங்கி கணக்கு பட்டியலை தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு எதிரிக்கும் இடையே நேரடியாக வங்கி மூலம் பணம் அனுப்பவில்லை என்றால சரிதான். எதிரியினுடைய வங்கி கணக்கு லாக் செய்யப்பட்டு இருப்பதாகவும், பணத்தை ரொக்கமாகவும், எதிரியினுடைய மகன்களில் வங்கி கணக்கிற்கு பணத்தை அனுப்பினேன். எனக்கும் எதிரிக்கும் இடையே நேரடியாக வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகள்

அஞ்சலிக்கும் எதிரியினுடைய மகன் மெல்வினுக்கும் இடையேதான் வங்கி பரிவர்த்தனை நடைபெற்றது என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கிலிருந்தும் பணம் அனுப்பியுள்ளேன்.

7. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 12.06.2023ல் பெற்றிருக்கிறார் என்றாலும் அதற்குரிய அஞ்சல் ஒப்புகை அட்டையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அஞ்சல் அட்டையில் எதிரியின் கையொப்பம் மற்றும் தொலைபேசி எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் எண்ணாக எழுதப்பட்டுள்ள ரூ.6 லட்சத்திற்கும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் எழுதப்பட்டுள்ள எதிரியினுடைய கைப்பேசி எண் எழுதப்பட்டுள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை.

8. மேற்படி காசோலையையும், அஞ்சல் ஒப்புகை அட்டையையும் ஆய்விற்கு உட்படுத்த தயாராக உள்ளேனா என்றால் சரிதான். காசோலை நிரப்பியது என் மகள் என்றால் சரிதான். 18.05.2023ம் தேதி ஜெர்லின் பெலிஸ்டா என்பவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதே தேதியில் ஜான் கென்னடி மற்றும் ஜூலியட் ஜெசிந்தா என்பவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரையும் யார் என்று எனக்கு தெரியாது. **(18.05.2023ம் தேதி ஜெர்லின் பெலிஸ்டா என்பவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எ.மா.ச.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

9.மேற்படி எ.மா.ச 1 வழக்கறிஞர் அறிபவிப்பில் 23.01.2023 ம் தேதியன்று ரூ.1 1/2 லட்சத்திற்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய மாத வருமானம் 25 ஆயிரம் ஆகும். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. என்னுடைய வங்கி கணக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய வங்கி கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் நிதி நிறுவனம் எதுவும் வைத்து நடத்திவில்லை. நான் எதிரிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் கடன் கொடுத்தேன் என்றால் ஆவணம் எதுவும் பெறவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில் கடன் கொடுத்தேன்.

10. என்னுடைய மகள் அஞ்சலி இவ்வழக்கை நடத்த எனக்கு பொது அதிகார பத்திரம் கொடுத்துள்ளாரா என்றால் பணம் நான்தான் கொடுத்தேன். அதனால் வழக்கை நான்தான் நடத்துகிறேன். என் மகளின் வங்கி கணக்கிலிருந்து நான்தான் பணத்தை மாற்றிவிட்டேன். எனக்கு அசையா சொத்து எதாவது உள்ளதா என்றால் என்னுடைய வீட்டை மகளின் திருமணத்திற்காக விற்றேன். அந்த பணத்தை தான் அவருக்கு மாற்றி விட்டேன். அந்த வீட்டை 2022 வருடம் 10 ம் மாதம் விற்றேன். அதற்குண்டான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 2023 ம் வருட காலக்கட்டத்தில் என்னுடைய வங்கி கணக்கில் 10 லட்சம் இருந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வீடு விற்ற பணத்தை கையில் தான் வைத்திருந்தேன்.

11. புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரிக்கு எங்கு வைத்து எந்தெந்த தேதிகளில் பணம் கொடுத்தேன் என்னும், யார் யார் இருந்தார் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரி காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன் அவருடைய வீட்டில் வைத்து தான் கொடுத்தார். வழக்கறிககாக குறிப்பிட்டு இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். என்றால சரியல்ல.

12. எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும், காசோலை கொடுக்க வில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய மகள் அஞ்சலியும் எதிரியினுடைய மகன்கள் ஆகியோர் நண்பர்கள் என்றால் சரியல்ல. அஞ்சலியிடமிருந்து நான் காசோலையை பெற்று நான் இவ்வழக்கை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிராகவும், என்னுடைய கணவருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு சிசி 315/2017 நடந்து என்றால் அது முடிவு பெற்று விட்டது. 2017-2018 லேயே முடிந்துவிட்டது. என் மகளின் படிப்பு தேவைக்காக பெற்ற பணத்தை திருப்பி கொடுத்து முடித்துவிட்டோம்.

13. எனக்கு எதிராக நிர்மலா என்பவர் காவல்நிலையத்தில் புகார் அளித்ததன் பெயரில் விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. 2023ல் என் மகள் சட்டம் படித்து வந்தாள் என்றால் இரண்டு மாதத்திலேயே படிப்பை நிறுத்திவிட்டாள். எதிரி எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும் எனக்கு அரசியல் செல்வாக்கு இருந்ததாலும் என்னுடைய மகள் சட்டம் பயின்று வந்ததாலும் எதிரியின் புகாரினை பெறாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கு கொடுக்கும் அளவிற்கு போதுமான பணம் என்னுடைய வங்கியில் இல்லை என்றாலும், 19.05.2023 ம் தேதி எதிரி எனக்கு எந்த காசோலையும் வழங்க வில்லை என்றாலும், எனக்கும் எதிரிக்கும் எவ்வித நேரடியான அல்லது வங்கி பண பரிவர்த்தணை இல்லை என்றாலும், சரியல்ல. இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதிரி வழக்கு காசோலையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2025.04.15 17:46:03 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**